பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

27 07 2026 7 15

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாடாளுமன்ற அவை நடவடிக்கைகள் டிஜிட்டல்மயமாக்கப்பட்டுள்ளதாக மாநிலங்களவைத் துணைத்தலைவர் திரு. ஹரிவன்ஷ் தெரிவித்துள்ளார்.

2. இளைஞர்களின் எதிகாலத்தைப் பாதுகாக்கும் வகையில், நிலையான சீர்திருத்த நடவடிக்கைகளை மத்திய அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. பொதுத்தேர்வு முறைகேடுகள் தடுப்பு சட்டத் திருத்த மசோதா மக்களவையில் இன்று தாக்கல் செய்யப்படுகிறது.

4. அமெரிக்கா - ஈரான் இடையே பேச்சுவார்த்தைகளை மீண்டும் மேற்கொள்ள ஏதுவாக ராணுவ நடவடிக்கைகள் இருவார காலத்திற்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

5. ஜிம்பாப்வே அணிக்கு எதிரான 3வது மற்றும் இறுதி டுவென்ட்டி-டுவென்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 35 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாடாளுமன்ற அவை நடவடிக்கைகள் டிஜிட்டல்மயமாக்கப்பட்டுள்ளதாக மாநிலங்களவைத் துணைத்தலைவர் திரு. ஹரிவன்ஷ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் மாநிலங்களவைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கான 2 நாள் பயிலரங்கில் நிறைவுரையாற்றிய அவர், இதனைத் தெரிவித்தார்.

உறுப்பினர்கள், அவையின் விதிகள், நடைமுறைகள், மரபுகள் சார்ந்த அனைத்து அம்சங்களையும் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

உறுப்பினர்களுக்கான பயிலரங்கு அவை நடவடிக்கைகளில் திறம்பட பங்கேற்க உதவிடும் என்று திரு. ஹரிவன்ஷ் கூறினார்.

<<<<>>>>

இளைஞர்களின் எதிகாலத்தைப் பாதுகாக்கும் வகையில், நிலையான சீர்திருத்த நடவடிக்கைகளை மத்திய அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், நாட்டின் தேர்வு நடைமுறைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் எந்தவொரு செயலையும் அனுமதிக்க முடியாது என்று அவர் உறுதிப்பட கூறியுள்ளார்.

தேர்வுகள் தொடர்பான முறைகேடுகளில் ஈடுபடும் நபர்களுக்கு வழங்கப்படும் தண்டனை, எந்தவொரு நபரும் அத்தகைய குற்றச் செயலில் ஈடுபடுவதற்கு அச்சப்படும் வகையில் அமையும் என்று திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பொதுத்தேர்வு முறைகேடுகள் தடுப்பு சட்டத் திருத்த மசோதாவை மக்களவையில் மத்திய அமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் இன்று தாக்கல் செய்கிறார்.

<<<<>>>>

முன்னதாக, தேர்வு முறைகேடு தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்காக விரைவு நீதிமன்றங்களை அமைக்கவும், முறைகேடுகளில் ஈடுபடுவோர் மீது கடும் தண்டனை வழங்கப்படுவதை உறுதி செய்வதற்குமான இந்த சட்டத் திருத்த மசோதாவிற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்திருந்தது.

<<<<>>>>

உச்சநீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான சட்டத் திருத்த மசோதாவை மக்களவையில் மத்திய சட்டத்துறை அமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மேக்வால் இன்று தாக்கல் செய்கிறார்.

உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகளின் எண்ணிக்கையை 38ஆக அதிகரிப்பதற்கு இந்த மசோதா வகை செய்கிறது.

<<<<>>>>

பெண்கள் மற்றும் சிறுபான்மையினருக்கான ஆணையங்களை தில்லி அரசு அமைத்துள்ளது.

இந்த நடவடிக்கை பெண்களன் உரிமைகளின் உரிமைகளை பாதுகாப்பதற்கும், சிறுபான்மையின சமுதாய மக்களின் உறுதி செய்யும் வகையில் இந்த ஆணையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா தெரிவித்துள்ளார்.

திருமதி லதா குப்தா தலைமையில் அமைக்கப்பட்டுள்ள பெண்களுக்கான ஆணையத்தில் Shyam Bala, Malti Verma, Lata Sodhi, Sanrika Sharma Jha, ரேணு பல்லா ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

திரு. நிர்மல் ஜெயின் தலைமையிலான தில்லி சிறுபான்மையினர் ஆலயத்தின் திரு. குல்தீப் சிங், திரு. முகமது ஹாரூன் ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

கர்நாடகாவில் கால்நடை மருத்துவ அதிகாரிகளின் பணி நியமனங்களில் முறைகேடு நடைபெற்றதாக கூறப்படும் குற்றச்சாட்டு குறித்து விசாரிப்பதற்காக குழு ஒன்றை அம்மாநில அரசு அமைத்துள்ளது.

கர்நாடக மாநில பணியாளர் தேர்வுக் குழு உறுப்பினர் திருமதி Shakuntala Dundigoudar தலைமையிலான இந்தக் குழு தனது அறிக்கையை ஒருவார காலத்திற்குள் அரசிடம் சமர்ப்பிக்கும் என்று அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதனிடையே இதுகுறித்த விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், இம்மாதம் 17-ம் தேதி வெளியிடப்பட்ட தேர்வுப் பட்டியல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அடுத்த மாதம் நடைபெற உள்ள அம்மாநில சட்டப்பேரவையின் மழைக்காலக் கூட்டத்தொடரின்போது இந்த விவகாரம் குறித்து கேள்வி எழுப்ப பிஜேபி முடிவு செய்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

மக்களவையில் தாக்கல் செய்யப்படும் தேர்வு சீர்திருத்த மசோதா மீதான விவாதத்தில் அனைத்து உறுப்பினர்களும் பங்கேற்க வேண்டும் என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதவில், மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க முடிவை பிரதமர் திரு. நரேந்திர மோடி மேற்கொண்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தேர்வு முறைகேடுகள் தொடர்பான வழக்குகள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள இந்த மசோதா வகை செய்வதாக திரு. கிரண் ரிஜிஜு கூறினார்.

<<<<>>>>

அமெரிக்கா - ஈரான் இடையே பேச்சுவார்த்தைகளை மீண்டும் மேற்கொள்ள ஏதுவாக ராணுவ நடவடிக்கைகள் இருவார காலத்திற்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஐ.நா.விற்கான அமெரிக்க தூதர் திரு. Mike Wualts வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஓமன் - ஈரான் நாடுகளுக்கிடையே அண்மைக் காலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் சண்டைநிறுத்தப் பேச்சுவார்த்தைகளுக்கு உதவிடும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே அமெரிக்க ராணுவ நிலைகள் மீதான பதில் தாக்குதல் நடவடிக்கைகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாக ஈரான் ராணுவ செய்தித்தொடர்பாளர் கூறியுள்ளார்.

<<<<>>>>

ஹோர்முஸ் நீரிணைப் பகுதியில் கடலுக்கு அடியில் வைக்கப்பட்டுள்ள கன்னி வெடியில் சிக்கி எண்ணெய்க் கப்பல் ஒன்று வெடி விபத்துக்குள்ளானதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈரான் அதிகாரிகள் அனுமதியளித்த பாதையிலிருந்து இந்தக் கப்பல் விலகிச் சென்ற நிலையில் இந்த கன்னி வெடியில் சிக்கியதாக அந்த தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இதன் காரணமாக அப்பகுதியில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழல் காரணமாக ஹோர்முஸ் நீரிணைப் பகுதியில் கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

வங்கக் கடலில் நிலவி வரும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக ஒடிசாவில் இன்று முதல் பருவமழை தீவிரமடையும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளிகளுக்கும், மயூர்பஞ்ச் மற்றும் ஜெகத்சிங்பூர் மாவட்டங்களில் உள்ள உயர்கல்வி

நிறுவனங்கள் மற்றும் அங்கன்வாடி மையங்களுக்கும் அம்மாநில அரசு விடுமுறை அளித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதன் காரணமாக மேற்குக் கடற்கரையோரப் பகுதிகளில் கன முதல் அதிகன மழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

இந்நிலையில் சத்தீஸ்கட் மற்றும் ஒடிசாவில் ஓரிரு இடங்களில் இன்று அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்குவங்கம், உத்தரப்பிரதேசம், கொங்கன், கோவா, மகாராஷ்டிரா, உத்தராகண்ட் ஆகிய பகுதிகளின் ஓரிரு இடங்களில் கன முதல் அதிகன மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

அருணாச்சலப்பிரதேசம், அசாம், மேகாலயா, நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், திரிபுரா ஆகிய மாநிலங்களில் இன்று பரவலாக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஜிம்பாப்வே அணிக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி டுவென்ட்டி-டுவென்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 35 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஹராரேயில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், முதலில் ஆடிய இந்திய அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 192 ரன் எடுத்தது.

193 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய ஜிம்பாப்வே அணி, 20 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 157 ரன் எடுத்தது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்தத் தொடரில், இந்தியா மூன்று ஆட்டங்களிலும் வெற்றி பெற்றுள்ளது.

----------------

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் இந்தியாவின் மீராபாய் சானு தங்கப் பதக்கம் வென்றார்.

Glasgow-வில் நடைபெற்றுவரும் பளுதூக்கும் போட்டியின் மகளிர் 48 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றி சாதனை படைத்துள்ளார்.

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில், அவர் தொடர்ந்து மூன்றாவது முறையாக தங்கப் பதக்கம் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆடவர் 65 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் ராஜா முத்துப்பாண்டி வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.

குத்துச்சண்டைப் போட்டியில் ஆடவர் 55 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் Jadumani Singh-ம், மகளிர் 54 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் ப்ரீத்தி பவாரும் காலிறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் இந்தியா இதுவரை ஒரு தங்கம், 2 வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

இதனிடையே பளுதூக்குதலில் தங்கப்பதக்கம் வென்றுள்ள மீராபாய் சானுவிற்கு குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

------------

காமன்வெல்த் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டி தில்லியில் இன்று தொடங்குகிறது. இதில் 35க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்கின்றன.

--------------

ராஞ்சியில் நடைபெற்று வரும் துரந்த் கோப்பை கால்பந்து போட்டியில் ஜாம்ஷெட்பூர் அணி 5 - 0 என்ற கோல் கணக்கில், Defender அணியை வென்றது.

மற்றொரு ஆட்டத்தில் இந்திய ராணுவ அணி 1 - 0 என்ற கோல் கணக்கில், Samaleswari அணியை வென்றது.

--------------

அல்டிமேட் டேபிள் டென்னிஸ் போட்டியில் மும்பை அணி பட்டம் வென்றது.

கோவாவில் நேற்று நடைபெற்ற இறுதி ஆட்டத்தில், அந்த அணி, கோவா அணியை வென்று சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

<<<< >>>>